**09.11.2022.**

**O.S. No.54/2017**

**PW.1 M.G.Shanmugam**

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிர்வாதிகளால் குறுக்கு விசாரணை செய்யப்படுகின்றார்.**

**<u>எதிர்வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

கிரய ஒப்பந்தத்தில், கிரய தொகை என நான் சொல்லும் தொகையில் 4/5 பங்கு தொகையை Advance ஆக கொடுத்திருக்கிறேன் என்பது எனது வழக்காகும். கிரய தொகையில் 4/5 பங்கு தொகை கொடுத்துவிட்டதாக சொல்லும் நிலையில், பாக்கி 1 பங்கு தொகைக்கு 22 மாத காலம் காலக்கெடு நிர்ணயிக்க வேண்டிய அவசியம் என்ன என்றால், என்னிடம் பாக்கி கிரய தொகை கிரய ஒப்பந்த சமயத்தில் கையில் இல்லாததால், 22 மாத காலம் என காலக்கெடு நிர்ணயம் செய்துக் கொண்டோம். கிரய ஒப்பந்தத்தில் கண்ட காலக்கெடு முடிவடைவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பாக வழக்கறிஞர் மூலம், Ex.A3 அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால், சரிதான். 14.12.2015ஆம் தேதியன்றுதான் பாக்கி கிரய தொகையை என்னால் தயார் செய்ய முடிந்தது என்றால், சரிதான். காலக்கெடு 3 வருடம் இருக்கிறது என்பதால், நான் கவனக்குறைவாக இருந்துவிட்டேன். இவ்வழக்கு 06.03.2017 அன்று தாக்கல் செய்திருக்கிறேன் என்றால், சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பிறகு 16 மாதம் கழித்து வழக்கு தாக்கல் செய்ய என்ன காரணம் என்றால், எதிர்வாதிகள் Ex.A3 அறிவிப்பிற்கு பிறகு அமைதியாக இருந்தார்கள். நானும் அமைதியாக இருந்துவிட்டேன். இதே காலகட்டத்தில் 4ஆம் எதிர்வாதி சுரேஷ் மீது பாலக்கோடு நீதிமன்றத்தில் 07.10.2015 நாளிட்ட காசோலை கொண்டு ரூ.9,00,000/- க்கு வழக்கிட்டுள்ளேன் என்றால், சரிதான். அது வேறு நடவடிக்கையாகும். அதேபோல் 2ஆம் எதிர்வாதி செந்தில்குமார் பெயரில் ரூ.7,50,000/- க்கு காசோலை தேதி 07.10.2015 நாளிட்டது என்று சொல்லி காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். அது தனிப்பட்ட

முறையில் நான் செந்தில்குமாருக்கு கொடுத்த தொகையாகும். எதிர்வாதிகள் என்னிடம் கடனாக பணம் வாங்கியிருந்தார்கள் என்றும், அக்கடனுக்கு ஆதரவாக இருப்பதற்காகவே வழக்கு கிரய ஒப்பந்தம் 2, 5 எதிர்வாதிகளின் காசோலைகளையும் பிணையமாக எதிர்வாதிகளிடம் வாங்கியுள்ளேன் என்றால், சரியல்ல. எதிர்வாதிகள் என்னிடம் ரூ.5,00,000/- மட்டும் பெற்றுக் கொண்டு வழக்கு கிரய ஒப்பந்தத்தை பிணையத்திற்காக இருப்பதற்காக எழுதிக் கொடுத்திருக்கிறார்கள் என்றால், சரியல்ல. நான் மேற்படி கடன் தொகை ரூ.5,00,000/- க்கு 22 மாதத்திற்கு வட்டி சேர்த்து ரூ.15,00,000/- என கிரய ஒப்பந்தம் எழுதியுள்ளேன் என்றால், சரியல்ல. 2015ஆம் வருடம் ஆகஸ்ட் மாதத்தில் எதிர்வாதிகள் என்னிடம் வாங்கிய கடன் தொகையை முழுவதுமாக கட்டி தீர்த்துவிட்டார்கள் என்றால், சரியல்ல. அந்த காசோலைகளை நான் திருப்பி கொடுத்துவிட்டேன் என்றால், சரிதான். அந்த காசோலைகளில் கையெழுத்து மாறியிருந்ததால், அதை எதிர்வாதிகளிடம் திருப்பிக் கொடுத்துவிட்டு வேறு காசோலைகளை வாங்கியுள்ளேன். நான் பொய் சொல்கிறேன் என்றாலும், எதிர்வாதிகளிடமிருந்து வாங்கிய காசோலைகளில் 2 காசோலைகளை நான் திருப்பி கொடுக்காமல் வைத்திருந்து அதை பின்னிட்டு நிரப்பி 2, 4 எதிர்வாதிகள் மீது பாலக்கோடு நீதிமன்றத்தில் காசோலை வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால், சரியல்ல. வழக்கு சொத்தை எதிர்வாதிகள் ஒருபோதும் எனக்கு கிரயம் செய்துக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் எழுதிக் கொடுக்கவில்லை என்றாலும், கடனுக்கு ஆதரவாக பிணையமாக இருப்பதாகவே கிரய ஒப்பந்தம் என்ற பெயரில் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள் என்றாலும், அது செல்லாது என்றாலும், சரியல்ல. நான் முதலில் பேருந்து வைத்து இயக்கி வந்தேன். பின்னர் அந்த தொழிலை விட்டுவிட்டு ஜவுளிக்கடை வைத்திருந்தேன் என்றாலும், சரிதான். ஜவுளிக்கடை வியாபாரத்தையும் நான் பின்னர் கைவிட்டுவிட்டேன். நான் கடந்த 20 வருட காலமாக வருமானவரி செலுத்தி வருகிறேன். சாட்சி தற்போது மாற்றி கூறுகிறார், 2012ஆம் வருடத்தில் இருந்து தாம் வருமானவரி செலுத்தி

வருவதில்லை என்று கூறுகிறார். ரூ.17,00,000/- தொகையை எதிர்வாதிகளுக்கு ஒரே தவணையில் கொடுக்கும் அளவிற்கு எனக்கு வசதி வாய்ப்பு இல்லை என்றால், சரியல்ல. எதிர்வாதிகள் என்னிடம் ரூ.5,00,000/- மட்டுமே கடனாக பெற்றிருந்தார்கள் என்றும், அதை வட்டியுடன் 2015ஆம் வருடத்திலேயே என்னிடம் திருப்பி கொடுத்துவிட்டார்கள் என்றால், சரியல்ல.

R SAKTHIVEL

Principal District Judge
Digitally signed by R SAKTHIVEL
Location: Krishnagiri